BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# காட்டு நாயக்கர்களின் கட்டு அவிழ்க்கப்படுமா?

முனைவர்.கோ. முருகேஸ்வரி
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை, தமிழ்நாடு, இந்தியா. மின்னஞ்சல்: jemurugeswari@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மனித குலம், அது தோன்றிய காலம் தொட்டே ஓரிடத்தில் நிலைபெறாமல் வெவ்வேறு இடங்களுக்கு மாறிச்செல்வதை இயல்பாகக் கொண்டிருக்கின்றது. தமிழக நிலப்பரப்பில் தோன்றிய தமிழினமும் பழங்குடி மக்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இதுகாறும் கிடைக்கின்ற சான்றுகளின் அடிப்படையில் காண்கின்ற போதும், பழங்குடி மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு நில வழியாகவும் நீர் வழியாகவும் தொடர்ந்து புலம் பெயர்ந்து இருப்பதைப் பார்க்க முடிகின்றது. பயணப் போக்குவரத்து வசதிகள் இல்லாத காலகட்டத்திலும் பழங்குடிகள் கால்நடையாகவே மிக நீண்ட தூரத்திற்குப் பயணம் செய்துள்ளனர். பெரும்பாலான வேளைகளில் பழங்குடி மக்களின் புலம் பெயர்வு என்பது தாங்கள் வாழ்கின்ற சூழலில் மிகப்பெரிய அளவிலான பாதிப்பினை அனுபவிக்கும் போதும், வாழ்கின்ற இடத்தில் தங்கள் வாழ்க்கையைத் தொடர முடியாத இக்கட்டான சூழல் ஏற்படும் போதும் நிகழ்கின்ற புலம்பெயர்வு என்பதை அறிய முடிகின்றது. அவ்வகையில், காட்டு நாயக்கர் சமூகத்தைச் சார்ந்த குறிப்பிட்ட இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களும், நிகழ் சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் விவரிப்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கம்.

**குறிச்சொற்கள்**

காட்டு நாயக்கன், குறி சொல்லுதல், வேட்டையாடுதல், பண்பாடு, கட்டவிழ்த்தல், மாந்தரிகம், புலம்பெயர்தல், திருமணமுறை.

## முன்னுரை

இந்திய நாடு மிகப் பழமையான நாடு. பல நூற்றாண்டுக்கு முன்னரே தனக்கென ஒரு வாழ்வையும், வரலாற்றையும் அமைத்துக் கொண்டதுடன் தனியொரு பராம்பரியத்தையும் கொண்டிருந்த பெருமையுடையது. நாகரிகத்தில் சிறந்து விளங்கும் நகரமக்களையும், நாகரிகமே இன்னதென அறியாத எத்தனையோ மலைவாழ் பழங்குடி மக்களையும் கொண்டுள்ளது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் 23 பழங்குடியினர் வாழ்வதாக 1961- ஆம் ஆண்டு மக்கட்தொகை கணிப்பு கூறுகிறது. இவ்வினங்களைச் சார்ந்த மக்களின் தொகை 1,60,595. இவர்கள், தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் குறிச்சன், பளியர், புளியர், காணிக்காரன், மலை அரையன், காட்டு நாயக்கர் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் தென்காசி, ஸ்ரீவில்லிபுத்தூர், சங்கரன் கோவில்,

விருதுநகர் பகுதிகளில் பன்நெடுங்காலமாக பொது இடங்களில் முகாமிட்டு வாழ்ந்து வந்தனர். காட்டு நாயக்கர்களின் வாழ்வியல் முறைகளையும் 21- ஆம் நூற்றாண்டின் நவீன வாழ்க்கையில் அவர்கள் எதிர் கொள்ளும் சவால்களையும் வரலாற்றுப் பார்வையுடன் முன்னகர்த்திச் செல்கிறது.

அவர்களுள் ஒரு சில குடும்பத்தினர் தங்களின் வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு (24 குடும்பங்கள்) வேறிடம் நோக்கி புலம் பெயர்கின்றனர். வந்தவர்கள் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில் தங்க விழைந்துள்ளனர்.

**வாழ்வியல் முறை**

சுமார் 1973- ஆம் ஆண்டுகளில் தென்காசி மலைத் தொடர்களில் நிலையான வீடுகளின்றி, நாடோடிகளாக வருடத்தின் பெருவாரியான நாட்கள் காட்டிலேயே வாழ்ந்தவர்கள் தான் காட்டு நாயக்கர்கள். காடுகளையும், காட்டு விலங்குகளையும் கையாள்வதில் இவர்களுக்குப் பாரம்பரிய அறிவு அதிகம் உண்டு. பொதுவாக இவர்கள் இயற்கையோடும்,வனவிலங்குகளோடும்

பின்னிப்பிணைந்த ஒரு தனித்துவமான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர். அதிலும் குறிப்பாக கூட்டு வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்ந்துள்ளனர். அதுபோல், சொத்து சேர்க்கும் வழக்கம் பாரம்பரியமாக இல்லை. காட்டில் கிடைக்கும் உணவைப் பங்கிட்டு உண்ணும் பழக்கத்தைக் கைக்கொண்டு வாழ்ந்துள்ளனர். இவை ஒருபுறமிருக்க,

பொது இடங்களில் எந்தவித பாதுகாப்பும் இன்றி பெரிய பெரிய மரங்களின் நிழலே வீடாக் கொண்டும் வாழ்ந்துள்ளனர். பகல் நேர வெயிலையோ, பெய்யும் மழையையோ பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால், இரவு நேரங்களில் கொடிய விசம் நிறைந்த பூச்சிகள், பாம்புகளிடம் இருந்து தங்களைப் பாதுகாக்க அரிய வகைத் தாவரங்களையும், அவற்றிலிருந்து தயார் செய்த மூலிகைப் பொடிகளையும் பயன்படுத்தித் தங்களைப் பாதுகாத்துள்ளனர். அது போக, ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்குச் சென்று தங்கும் பொழுது (ஒருவகையான நம்பிக்கை) அந்த இடம் நன்மையான இடமா? அல்லது தீய சக்திகள் ஏதேனும் அவ்விடத்தில் இருக்கிறதா? என்று கண்டறிய முனைந்துள்ளனர். ஏனெனில் காட்டு நாயக்கர்கள் தங்கள் குடுமபத்தினரையும் எதிர்காலச் சந்ததியினரையும் பாதுகாக்கும் தன்னலமற்ற தலையாயப் பண்பினைக் கொண்டவர்கள் என்பதற்கு ஒரு சான்று வருமாறு,

இவ்வின மக்கள் நாடோடிகளாக வாழ்ந்து வந்தவர்கள் என்பது அறிந்ததே. இருப்பினும், சில குறிப்பிட்ட விலங்குகளையும் தங்களுடன் வளர்த்து வந்துள்ளனர். குறிப்பாக நாய், கழுதை, மாடு, பூனை போன்றவைகள். இவற்றுள் கழுதை இவர்கள் இடம்விட்டு இடம் பெயரும் பொழுது அவர்களின் பொதிகளைச் சுமப்பதற்காக மட்டுமல்லாது அவர்கள் தங்கும் இடங்களின் தன்னைமயை அறிந்து கொள்ளவும் பயன்படுத்தியுள்ளனர். அதாவது கழுதையின் ஒரு சில முடிகளை (மயிர்) முடிச்சு போன்று செய்து தங்கும் இடத்தில் கட்டிவைத்துள்ளனர். ஏது என்னவெனில்

i. அவ்விடத்தில் தீய சக்திகள் இருந்தால் கழுதையின் முடி (மயிர்) விரட்டி விடும் என்பதாகவும்,

ii. அவர்கள் அவ்விடத்தில் தங்கும் நாட்கள் வரை, மேற்கொண்டு எந்தத் தீய சக்திகளும் தங்களைத் தீண்டாது என்பதாகவும் நம்பிக்கை கொண்டுள்ளனர். என்பதைத் தகவலாளி தங்கம்மாள் என்பவாறன் வாய்மொழியால் அறிந்து கொள்ள முடிகின்றது.

மேலும், தொடர்ந்து அவர்கள் தங்கள் வரலாற்றையும் பழக்க வழக்கங்களையும் பாடல் மற்றும் நடனத்தின் வழி வளர்த்து வந்துள்ளனர்.

**திருமண முறை**

காட்டு நாயக்கர்கள் ஒருதார மணத்தையே நெடுங்காலமாகக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்துள்ளனர். பெண்கள் பருவமடைந்த பிறகே திருமணம் செய்து வைத்துள்ளனர்.





திருமணத்தின் போது மட்டுமின்றி குழந்தை பிறக்கும் பொழுது பெண் குழந்தையெனில் அது பருவ வயது எய்தும் பொழுதும், வயது மூப்பின் நிமித்தம் இறக்கும் தருவாயிலும் குறிப்பிட்ட சடங்கு முறையைப் பின்பற்றியுள்ளனர். இவர்கள் குலத்தாலியாக கருகமணியும், அதன் இரு பக்கங்களிலும் இரு மாங்காய் வடிவ அணிகலனோ அல்லது இரு குண்டு மணிகளோ அணிவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

**குலத்தொழில்கள்**

காட்டு நாயக்கர்களின் பிரதான தொழில்களாக,

1. பாம்பு பிடித்தல்
2. நாட்டு மருத்துவம் பார்த்தல்
3. குறி சொல்லுதல்
4. பன்றி மேய்த்தல்

ஆகியன இருந்துள்ளன.

**பாம்பு பிடித்தல்**

காட்டு நாயக்கர்கள் பெரும்பாலும் தங்கள் வாழ்வைக் காடுகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுமே வாழ்ந்து வந்தவர்கள். இதன் காரணத்தினாலோ எதனாலோ பாம்பு பிடிப்பதைத் தங்களின் முக்கிய குலத் தொழிலாகக் கருதி, தந்தை, தந்தைக்குப் பின் மகன் என காலங்காலமாக செய்து வந்துள்ளனர். 1970 களில் இத்தொழிலால் மக்கள் மத்தியில் இவர்கள் நன்மதிப்புப் பெற்றவர்களாகத் திகழ்ந்துள்ளனர். ஆம் இவர்கள் எத்தகு கொடிய நஞ்சு மிக்க பாம்புகளையும் தங்கள் கைத்திறமையால் பிடித்துவிடும் பக்குவம் மிக்க சாதுர்யர்களாகத் திகழ்ந்துள்ளனர்.









மக்கள் வசிக்கும் வீட்டிலோ, தொழில் செய்யும் இடத்திலோ, வேறு எவ்விடத்திலுமோ பாம்பு புகுந்துவிட்டால் அங்கு வசிக்கும் மக்கள் முதலில் தேடுவது இவர்களைத்தான் என்பது இவ்வவிடம் குறிப்பிடத்தக்கது. பஞ்ச காலங்களில் இவர்களின் வாழ்வாதாரமே பாம்பு பிடிக்கும் தொழில்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. மட்டுமல்லாது, பெரும் மன நிறைவையும் இவர்கள் பெற்று வாழ்ந்துள்ளனர்.

எந்த வீட்டில் பாம்பு பிடிக்கிறார்களோ அவர்கள் தரும் உணவுப் பொருட்கள், தானியங்கள் மற்றும் பணம் இம்முறை எல்லா நாட்களிலும் அமைந்து விடுவதும் இல்லை என்பதும் வருந்தத்தக்கதான ஒன்றே என்று தகவலாளி இராமசாமி கூறுவதிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது.

**நாட்டு மருத்துவம்**

காட்டு நாயக்கர்கள் வாழ்வின் தொடக்கம் முதல் முடிவு வரை எந்த வித அறிவியல் மருந்துகளையோ அல்லது மருத்துவரையோ அணுகுவதில்லை என்பதாக அறியப்படுகின்றது. இருப்பினும், கால மாற்றத்திற்கேற்பவும், நாகரீக வாழ்க்கை முறைக்கு ஏற்பவும் இந்நிலை மக்களிடையே இன்று மாறியுள்ளது என்பதையும் இவ்விடம் மறுப்பதற்கில்லை. இன்றையக் காலச் சூழலில் இவர்களின் வாழ்வியல் முறைகளிலும், பழக்க வழக்கங்களிலும், மருத்துவ முறைகளிலும் பெருவாரியான மாற்றத்தையே விரும்பி விழைகின்றனர் என்பது நிதர்சன உண்மையாகப் பார்க்கப்படுகிறது.

நாட்டு மருத்துவம் என்பது சிறியவர்கள் தொடங்கி முதியவர்கள் வரை ஆண், பெண் இருபாலருக்கும் பார்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

சளி, காய்ச்சல், இருமல், தலைவலி தொடங்கி பிரசவம் பார்த்தல், எலும்பு முறிவுக்கான மருத்துவம் மற்றும் பாம்பு கடித்தால் அதிகபட்சமாக அதன் விசம் முறிக்கப்பட்டு உயிர் பிழைத்தற்கு ஏதுவான அனைத்து மருத்துவ முறைகளையும் செய்து வருவதாகக் கூறுகிறார் குட்டராசு அவர்கள்.

குறிப்பாக, குழந்தையின்மைக்கான தீர்வையும், மருத்துவத்தையும், பச்சிலைகள் மற்றும் மூலிகைப் பொடிகள் கொண்டு சரிசெய்துள்ளனர். தங்களை நாடி வரும் பொது மக்களுக்கும் மருத்துவ உதவிகளைச் செய்து வந்துள்ளனர்.

**குறிசொல்லுதல்:**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் இவ்வின மக்கள். குறிசொல்லுதல் இவர்களின் பாரம்பரியத் தொழிலாகவும், கலாசார அடையாளமாகவும் பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தைக் கணிக்கும் திறன் பெற்று விளங்கியதுடன் பொதுமக்கள் வாழ்வில் ஏற்படும் சில தீய நிமித்தங்களுக்கு எதிராக சக்தி வாய்ந்த மந்திரங்கள் மற்றும் பரிகாரங்கள் வழங்கி இவர்கள் பிழைப்பு நடத்தியுள்ளனர். ஆண்கள் பெரும்பாலும் பாம்பு பிடிக்கும் தொழில் செய்து வந்துள்ளனர். குறிசொல்லும் இத்தொழிலைப் பெரும்பான்மையாகப் பெண்களே செய்து வந்துள்ளனர்.



சங்ககால வாழ்க்கையில் குறவன் குறத்திகளே குறி சொல்லும் தொழில் செய்பவர்களாய்க் கருதப்பட்டவர்கள். இது குறித்து எழிலவன், “வேட்டைச் சமூகம் என்னும் நிலையில் ஒன்றென உணரப்பட்டாலும் நரிக்குறவர்கள், கூடை, முறம் கட்டுபவர்கள்,பன்றி வளர்ப்பவர்கள், பாசிமணி, ஊசி விற்பவர்கள், ஆடி பிழைப்பவர்கள் என்றாவது அவ்வப்போது இவர்கள் செய்யும் தொழிகளின் அடிப்படையில் சிற்சில வேறுபாடுகளும் பிரிவினைகளும் இவர்கட்கிடையே இருந்து வருகின்றன”. என்பதாய்க் கூறியிருப்பது நாயக்கர் சமூகத்துப் பெண்களும் குறிபார்த்து வாழ்ந்து வந்துள்ளனர் என்பது தெளிவாகிறது. தொடர்ந்து ஏடு பார்த்து குறி சொல்லும் முறையும், சோவி பார்த்து குறி சொல்லும் முறையும் கையாண்டும் வந்துள்ளனர்.

எதிர்காலத்தைக் கணித்துச் சொல்வது மட்டுமின்றி சில திருமணத் தடைகள், பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேர்வதற்கான பரிகார வழிமுறைகள், குழந்தையின்மைக்கான பரிகார வழிமுறைகள் போன்றவற்றைச் செய்தும் மக்களை மகிழ்வித்தும் அவர்கள் தரும் பரிசுப் பொருட்களையும் காணிக்கைகள் மற்றும் நன்கொடைகள் பெற்றும் வாழ்ந்ததாகக் கூறுகிறார் தகவலாளி உத்தமி மாரி.

**பன்றி மேய்த்தல், வேட்டைக்குச் செல்லல்**

பொதுவாகக் காட்டு நாயக்கர்கள் தங்கள் வீடுகளில் பலதரப்பட்ட விலங்குகளை வளர்த்து வந்தாலும் அவற்றுள் பிரதானமாக

பன்றி வளர்ப்பு இடம் பெறுகிறது. சமவெளிகளில் வாழும் நகர்ப்புற மக்கள் தங்கள் வீடுகளில் ஆடு, மாடுகளை வளர்ப்பதைப் போன்று இவர்கள்; பன்றிகளை வளர்த்து வந்துள்ளனர் என்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது. வருடத்தின் ஏதாகிலும் ஒரு சிறப்பு தினங்கள் வருமாயின் அன்றைக்குப் பன்றிக் கறி சமைத்து உணவு உண்டுள்ளனர்.

இக்கருத்தினை உறுதிபடுத்தும் விதமாக "குறிஞ்சியில் பண்டை மனிதன், தொடக்கத்தில் கனி கொட்டைக்குள் இருக்கும் பருப்பு, கிழங்கு வகைகளை உண்டே உயிர் வாழ்ந்திருந்தான். பருவநிலை மாறுதல் காரணமாக, இவ்வுணவுப் பொருள் கிடைப்பதில் ஏற்பட்டு விட்ட முரண்பாட்டு நிலை அவன் உணவு வகையில், விலங்குகளின் இறைச்சியையும் சேர்த்துக் கொள்ளத் தூண்டிற்று. விலங்குப் பகைவரிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்கும் மேலாக இவ்வுணவுத் தேவையே அவனை வேட்டையில் வல்லுநனாக ஆக்கிற்று" என்பதாய் கா.கோவிந்தன் கூறியிருப்பது இவ்விடம் நினைக்கத்தக்கதாய் உள்ளது.

இவர்கள் பகல் நேரங்களில் சிறுசிறு காட்டு விலங்குகள்,



பறவைகள் வேட்டையாடி உணவாக உண்பதுடன் இரவு நேரங்களில் காட்டுப் பன்றிகளையும் வேட்டையாடி உண்டு வாழ்ந்து வருவதாகக் கூறுகிறார் தகவலாளி கார்த்திக்.



**பேச்சு மொழி:**

காட்டு நாயக்கர்கள் பெரும்பாலும் பேசும் மொழியாக அனைத்துத் திராவிட மொழிகளின் கலவையாக இருப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இவர்களின் பேச்சு மொழியில் தமிழ், கன்னடம் மற்றும் மலையாள மொழிகளின் தாக்கம் காணப்படுகிறது. பொதுவாக இவர்கள், தங்களுக்குள் கருத்துப் பரிமாறுதல் என்பது எழுத்து வடிவம் பெறாத பேச்சு வழக்கில் மட்டுமே உள்ள கன்னட மொழியாகும். மற்றையவர்களிடம் பழகும் பொழுது தமிழில் கலந்துரையாடி தங்கள் கருத்தைப் பதிவு செய்து கொள்கின்றனர்.

**குலதெய்வ வழிபாடு:**

காலங்காலமாக நாடோடிகளாக வாழும் பழங்குடி சமூகத்தைச் சார்ந்தவர்களாகிய இக்காட்டு நாயக்கர்கள் தங்கள் குலதெய்வமாக முருகப் பெருமானை வழிபட்டு வருகின்றனர். ஆண்டு தோறும் பங்குனி உத்திரத்தன்று வசிக்ககூடிய ஒவ்வொரு குடும்பமும் ஒன்று சேர்ந்து உணவு சமைத்து முருகனுக்கு

படையல் போட்டு மகிழ்வுடன் வழிபாடு செய்துள்ளனர்.

**நவீன உலகில் காட்டு நாயக்கர்கள்**

தமிழகத்தின் தென்காசி பகுதியில் ஆங்காங்கு கூட்டங்கூட்டமாக வாழ்ந்தவர்கள் பழங்குடிகளான காட்டு நாயக்கர்கள். 1973 முதல் 1983 வரை இவ்விதமாய் வாழ்ந்த இவர்கள் 1983-ன் பிற்பகுதியில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் புலம்பெயர்ந்து வாழத் தொடங்கியுள்ளனர். மொத்தமாக 24 குடும்பத்தைச் சேர்ந்த இவர்களுக்கு 1990-ல்; சரியானதொரு இடத்தைத் தேர்வு செய்து அதற்கான வீட்டுமனை பட்டாவையும் அரசிடமிருந்து பெற்றுத்தந்த மதிப்பிற்குரியவர்கள் திரு.ஜெ.ராயர் லெட்சுமிகாந்தன் மற்றும் திரு.ஸ்ரீ. இளங்கோவன் ஐயா அவர்களுமே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாடோடிகளாக வாழ்ந்தவர்களுக்கு நிலையானதொரு வாழ்விடம் கிடைக்கப் பெற்று சக மனிதர்கள் போல் வாழ முற்பட்ட தருணத்தில், பள்ளிகள், வேலை பார்க்கும் இடங்களில் ‘சாதிச்சான்றிதழ்’ என்பது பேரிடியாக விழுந்துள்ளது. 24 குடும்பங்கள் இன்று 40-50 குடும்பங்களாக உயர்ந்துள்ளன. அவர்களின் குலத்தொழிலை விட்டுவிட்டு தங்களுடைய பிள்ளைகளும் படித்து சமூகத்தின் மதிப்பிற்குரிய பதவிகளில் வகிக்க வேண்டும் என்று அவா கொண்டனர்.

இன்றைய சூழலில், இச்சமூகத்தைச் சார்ந்த மாணவர்கள், மாணவிகள் பலர் கல்லூரி படிப்பை முடித்து, துணை இராணுவத்திலும், காவல் துறையிலும் பணிபுரிந்து வருவதும், பெண்கள் சிலர் செவிலியர் படிப்பை நிறைவு செய்து செவிலியர்களாகப் பணிபுரிந்து வருவதும், ஆசிரியராகப் பணிபுரிந்து வருவதும் நாட்டு மக்களிடையே காட்டு நாயக்கர்களின் மதிப்பையும், மரியாதையையும் பெற்றுத் தந்துள்ளது.

இந்நற்செய்தியின் நீட்சியாக தொடர்ந்து வரும் குறிப்பிடத்தக்க சிக்கலையும் பல ஆண்டுகளாக இவர்கள் எதிர் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். என்னையெனில் தங்கள் சமூகத்திற்கான “இந்து-காட்டு நாயக்கன்” என்னும் வகுப்புச் சான்றிதழை எத்தனையோ மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் போராட்டமாகவும் ஆர்ப்பாட்டமாகவும் நிகழ்த்தியும் சரியான வகுப்புச் சான்றிதழைப் பெற முடியாத சூழலே இன்றும் தொடர்கிறது.

இச்சமூகத்தைச் சார்ந்த இன்றைய இளந்தலைமுறையினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா? அரசு அதிகாரங்கள். இளைஞர்களின் கண்கள், ஆட்சி மாறி, காட்சி மாறி, அரசு மாறினாலும் எங்களின் உண்மைச் சான்றிதழைப் பெற வழியே இல்லையா? என்ற ஏக்கம் வெளிப்பட்டுத் தெரிவதைக் காட்டுகிறது. சமூகத்தில் எத்தனையோ மனிதர்களின் மாந்தரீகக் கட்டுக்களைக் கட்டவிழ்த்த காட்டுநாயக்கர்களின் வகுப்புச் சான்றிதழ் பெறுவதில் கட்டப்பட்டுள்ள நிறுவனம் சார்ந்த கட்டுக்கள் அவிழ்க்கப்படுமா? காலம் நல்லதொரு எதிர்வினையாற்றும். அவர்களின் ஏக்கப்பார்வை மாறி காரியம் கைகூடி வரவும் அரசு அதற்கான பணியை விரைந்து

செயலாற்றவும் இறைவனை வேண்டுவோம்.

**முடிவுரை**

- நாடோடிகளாக வாழ்ந்த பழங்குடிகளுள் ஒரு பிரிவினர் காட்டு நாயக்கர்கள.;
- தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இவர்கள் வாழ்ந்துவந்த போதிலும் குறிப்பாக தென்காசி, ஸ்ரீவில்லிபுத்தூர், சங்கரன் கோவில், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் இருந்து குடிபெயர்ந்து வாழ்ந்த மானாமதுரைவாழ் காட்டு நாயக்கர்களின் வாழ்வியல் குறித்து இக்கட்டுரை விவரித்துள்ளது.
- பல்வேறு இடங்களில் வாழ நேர்ந்தாலும் தங்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையைக் கடைபிடித்து வாழ்ந்துள்ளனர்.
- மாறிவரும் நாகரீக நகர வாழ்க்கையைத் தாங்களும் வாழ்வதற்குத் தேவை “இந்து-காட்டு நாயக்கன்’ என்னும் வகுப்புச் சான்றிதழ் மட்டுமே என்று அவர்களின் ஒட்டு மொத்தக் குரலாக நிறைவு பெறுகிறது இக்கட்டுரை.

**துணைநூல் பட்டியல்**


1. அகத்தியலிங்கம்.ச, தமிழகப் பழங்குடி மக்கள், அண்ணாமலைப் பல்கழைக் கழகம், முதல் பதிப்பு – 1972
2. எழிலவன், தமிழகத்தின் மரபுக் கலைகள், பிளாக்ஹோல் மீடியா பப்ளிகேஷன், சென்னை, பதிப்பு – 2010
3. கோவிந்தன்.கா, தமிழர் வரலாறு, ராமையா பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2014


**தகவலாளர்கள்**

1. குட்டராசு - வயது 80 - நேர்காணல் தேதி: 03.08.2026
2. தங்கம்மாள் - வயது 80 - நேர்காணல் தேதி: 04.08.2026
3. கார்த்திக் - வயது 55 - நேர்காணல் தேதி: 05.08.2026
4. உத்தமி மாரி - வயது 50 - நேர்காணல் தேதி: 08.08.2026

*****